இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 16-11-2024

# அரசு ஊழியர்களை வேட்டையாடிய அ.தி.மு.க.

அரசு ஊழியர்களுக்கு ஆபத்பாந்தவரைப் போல வேடமிட்டுக் கொண்டிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி. அவரது தலைவி ஜெயலலிதா ஆட்சிக் காலமாக இருந்தாலும், அவரது ஆட்சிக் காலமாக இருந்தாலும் - மொத்தத்தில் அ.தி.மு.க. ஆட்சியே அரசு ஊழியர்களை வேட்டையாடிய ஆட்சிதான் என்பதை அரசு ஊழியர்களும், தமிழ்நாட்டு மக்களும் மறந்திருக்க மாட்டார்கள்!

24-7-2001 அன்று திருவல்லிக்கேணியில் நடைபெற்ற அரசு ஊழியர்கள் சங்கக் கட்டிடத் திறப்பு விழாவில் முதலமைச்சர் ஜெயலலிதா பேசும் போது, “அரசுக்குக் கிடைக்கின்ற மொத்த வரி வருவாயில் 94 சதவிகிதம் அரசு ஊழியர்களுக்கே செலவாகிறது” என்று உண்மைக்கு மாறான தகவலைச் சொன்னார்.

**2002ஆம் ஆண்டு அக்டோபர் 28ஆம் தேதி அன்று, “அரசு ஊழியர்களுடன் எத்தனை முறை பேச்சு நடத்தினாலும் நான்கு சதவிகித அகவிலைப் படிக்கு மேல் வழங்க முடியாது. அரசின் மொத்த வருவாயில் 94 சதவிகிதம் அரசு ஊழியர்களுக்கே சென்று விடுகிறது. மொத்த மக்கள் தொகையில் 2 சதவிகிதமே உள்ள அரசு ஊழியர்களுக்கு 94 சதவிகிதம் செலவு என்றால், மீதி உள்ள 6 சதவிகித வருவாயில் வளர்ச்சிப் பணிகளுக்கு என்ன இருக்கிறது?” என்று சொன்னவரும் அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதாதான்.**

**அரசு அலுவலர்கள் போராட்டத்தை ஒடுக்குவதற்காக புதிய சட்டம் கொண்டு வரப்பட்டதும் ஜெயலலிதா ஆட்சியிலே தான். இந்தச் சட்டத்தை மீறி வேலை நிறுத்தம் செய்பவர்கள், மற்றும் அதைத் தூண்டுபவர்கள் ஆகியோருக்கு மூன்றாண்டு சிறைத் தண்டனை அல்லது ரூபாய் 5000 அபராதம் அல்லது இரண்டும் விதிக்க சட்டத்தில் வகை செய்யப்பட்டதும் அ.தி.மு.க. ஆட்சியிலேதான்.**

தமிழக அரசு அலுவலர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 23-10-2002 அன்று முதல் காலவரையற்ற வேலை நிறுத்தம் செய்யப் போவதாக அறிவித்தார்கள். “அந்தப் போராட்டத்தில் ஈடுபடும் அரசு அலுவலர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். வேலைக்கு வராத நாட்களுக்கு சம்பளம் அளிக்கப்பட மாட்டாது” என்றெல்லாம் எச்சரிக்கை செய்தவர்தான் முதல்வர் ஜெயலலிதா. வேலை நிறுத்தம் செய்யும் ஆசிரியர்கள் உடனடியாக வேலைக்குத் திரும்ப வேண்டும். இல்லை என்றால் மூன்றாண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கும் வகையில் சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அ.தி.மு.க. அரசின் சார்பில் அறிக்கை வெளியிடப்பட்டது.

ஜெயலலிதா அரசாங்கத்துடன், 2002 ஆம் ஆண்டு அரசு ஊழியர்கள் நடத்திய பேச்சுவார்த்தை தோல்வி அடைந்த காரணத்தால், போராட்டத்தை ஒடுக்கும் வகையில் அரசு அலுவலர் சங்கத் தலைவர்களை இரவோடு இரவாக ‘எஸ்மா’ சட்டத்தின்கீழ் கைது செய்ய உத்தரவிட்டவர் ஜெயலலிதா. அரசு ஊழியர்களின் வீடுகளுக்குள் புகுந்து காவல் துறையினர் கைது செய்தார்கள்.

அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் 2003 ஜூலை 2-ந்தேதி முதல் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்ட அரசு ஊழியர்களை விசாரணை நடத்தாமல் டிஸ்மிஸ் செய்யும் ‘எஸ்மா’ சட்டத்தை 04-07-2003-ல் பிறப்பித்தார் ஜெயலலிதா. 200-க்கும் மேற்பட்ட அரசு ஊழியர் சங்கங்களின் அங்கீகாரத்தை ரத்து செய்தவர் ஜெயலலிதா.

‘எஸ்மா’ சட்டத்தின்படி தமிழ்நாடு முழுவதும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் என 1 லட்சத்து 70 ஆயிரம் பேரை ஒரே உத்தரவின்பேரில் கூண்டோடு டிஸ்மிஸ் செய்து கொடூரத்தின் உச்சத்தை நிகழ்த்திக் காட்டியவர் ஜெயலலிதா.

போனஸ் கேட்டு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட போக்குவரத்துத் தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கில் கைது செய்யப்பட்டுச் சிறையிலே தள்ளப்பட்டதும் ஜெயலலிதா ஆட்சியிலேதான். போக்குவரத்து ஊழியர்கள் வேலை நிறுத்தத்தை ஒடுக்குவதற்காக 2,575 தற்காலிகத் தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். 17 நாட்கள் போராட்டம் நடைபெற்றது.

2001-ஆம் ஆண்டு, 1.20 லட்சம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் - 13 ஆயிரம் மக்கள் நலப் பணியாளர்கள் - 10 ஆயிரம் சாலைப் பணியாளர்கள் என, இவர்கள் அனைவரது வேலையையும் ஒரே நேரத்தில் பறித்த கொடூரக் காட்சிகள் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில்தான் நடந்தது.

ஆசிரியர், அரசு அலுவலர் போராட்டத்தில் கலந்துகொண்டு மறியலில் ஈடுபட்ட பொள்ளாச்சி நம்பியமுத்தூர் பள்ளி தலைமை ஆசிரியர் காசிப்பாண்டியன் தனது உடலில் மண்ணெண்ணெய்யை ஊற்றிக் கொண்டு தீக்குளித்து மாண்டார். தேனி மாவட்டம், பெரியகுளம் மாவட்டத்தைச் சேர்ந்த தேவதானப்பட்டி மஞ்சளாறு அணைப்பகுதியில் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த அப்துல் சத்தார், அ.தி.மு.க. அரசின் அராஜகத்தைக் கண்டித்து தற்கொலை செய்து கொண்டார். இந்த இரண்டு குடும்பங்களுக்கும் தி.மு.க. அறக்கட்டளை சார்பில் தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் நிதி உதவி அளிக்கப்பட்டது. இவை எல்லாம் ஜெயலலிதா ஆட்சிக் காலத்து நிகழ்வுகள் ஆகும்.

**அடுத்து வந்தார் பழனிசாமி. அவரும் ‘அம்மா’ வழியில் பயணம் ஆனார். தொடக்கப் பள்ளி ஆசிரியர் வாங்கும் சம்பளத்தைக் குறிப்பிட்டு “இவ்வளவு சம்பளமா?” என இழிவுபடுத்தியவர்தான் பழனிசாமி. அரசு ஊழியர்களையும், ஆசிரியர்களையும் பார்த்து, “அதிக சம்பளம் வாங்கும் நீங்கள் போராடலாமா?” என்று கேட்டவர் தான் பழனிசாமி.**

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் கூட்டமைப்பான ‘ஜாக்டோ-ஜியோ’ 2019 ஜனவரியில் போராட்டத்தை நடத்தியது. அ.தி.மு.க. அமைச்சர் ஜெயக்குமார், அரசு ஊழியர்களை மிரட்டினார். “கோரிக்கையை ஏற்க முடியாது. பணிக்குத் திரும்பாவிட்டால் நடவடிக்கை பாயும். அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு தர, மக்களிடம் கூடுதல் வரி விதிக்க வேண்டி வரும்” என்று சொன்னார்.

அரசு ஊழியர் போராட்டம் நடந்து கொண்டிருந்த போது 2019 ஜனவரி 27- ஆம் நாள் அனைத்து நாளிதழ்களிலும் முக்கால் பக்கத்துக்கு அமைச்சர் ஜெயக்குமாரின் பெயரில் விளம்பரம் வெளியிட்டவர்தான் இந்த பழனிசாமி அரசு. அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கான சம்பளப் பட்டியலை வெளியிட்டு, இது தமிழக அரசின் வரி வருவாய்த் தொகையில் 70 சதவீதம் என்று தெரிவித்திருந்தார் ஜெயக்குமார். ‘பிற தனியார் நிறுவனத்தைக் காட்டிலும் அதிகச் சம்பளத்தை அரசு ஊழியர்கள் பெறுகின்றனர். தனியாரைவிட அரசு ஊழியர்கள் அதிகச் சம்பளம் வாங்குகிறார்கள் அவர்களுக்கு எதற்குப் போராட்டம்?’ எனக் கொச்சைப்படுத்தியவர்தான் இந்த பழனிசாமி.

பழனிசாமி ஆட்சியில் அரசு ஊழியர்கள் போராடினார்கள். 85 ஆயிரம் பேருக்கு விளக்க விசாரணைக் கடிதம் அனுப்பியவர்தான் இந்த பழனிசாமி. ஆயிரக்கணக்கான அரசு ஊழியர்கள் மீது குற்றக் குறிப்பாணைகள் (17B), இடமாற்றம், பணியிடைநீக்கம், வழக்கு போன்ற ஒடுக்கு முறைகளை ஏவியவர்தான் இந்தப் பழனிசாமி. இப்போது பேட்டிகள் கொடுத்துக் கொண்டிருக்கிறாரே அதே பழனிசாமிதான்.

## டெல்லி காற்று மாசு பிரச்சினை குறித்து வழக்கு!

புதுடெல்லி, நவ. 16 –

டெல்லியில் கடந்த இரண்டு நாட்களாக காற்று மாசு அபாய எல்லையை தாண்டி உச்சத்தில் இருக்கிறது. இதனால் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் இது குறித்த வழக்கை அவசரமாக விசாரிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் முறையிடப்பட்டது. டெல்லியில் கடந்த இரண்டு நாட்களாக காற்று மாசு மிக மோசமாக உள்ளது. இதனை தவிர்க்கவே நீதிமன்றம் ஏற்கனவே முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்திருந்தது.

தற்போது உலகின் மிக மாசுபட்ட நகரமாக டெல்லி மாறும் ஆபத்து உள்ளது. காற்று மாசு தடுப்பு குழு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பது குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து வழக்கை திங்கட்கிழமை விசாரிப்பதாக உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளது.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.11.2024) தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில், 7,893 பயனாளிகளுக்கு, ரூ.206.47 கோடி மதிப்பில் பல்வேறு அரசு துறைகளின் சார்பாக நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன், மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.சி.சண்முகையா, ஜி.வி.மார்க்கண்டேயன், ஊர்வசி செ.அமிர்தராஜ், மேயர் பெ.ஜெகன், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை செயலாளர் மருத்துவர் தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித் தலைவர் க.இளம்பகவத், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை துணைச் செயலாளர் மு.பிரதாப், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் திருமதி அ.பிரம்மசக்தி, துணை மேயர் திருமதி செ.ஜெனிட்டா, தூத்துக்குடி மாநகராட்சி ஆணையாளர் லி.மதுபாலன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி இரா.ஐஸ்வர்யா, மாவட்ட வன அலுவலர் ரேவதி ரமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தூத்துக்குடியில் 7,893 நபர்களுக்கு ரூ.206.46 கோடியில்

# நலத்திட்ட உதவிகள் : துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

### வளர்ச்சித் திட்டங்கள் குறித்தும் அதிகாரிகளுடன் விவாதித்தார்!

**தூத்துக்குடி, நவ. 16 - தூத்துக்குடியில் 7 ஆயிரத்து 893 நபர்களுக்கு 206 கோடியே 46 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். தொடர்ந்து வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை நடத்தினார்.**

தூத்துக்குடி மாவட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் துறை ரீதியான ஆய்வு கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டார். மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மக்களிடம் முறையாக சென்று சேர்கிறதா?, என்னென்ன பணிகள் நிறைவடைந்துள்ளன? என்னென்ன பணிகள் இன்னும் முடிவடையாமல் உள்ளது என்பதை குறித்து அதிகாரிகளிடம் துணை முதலமைச்சர் கேட்டறிந்தார்.

தமிழ்நாடு அரசின் திட்டங்களை சரியான முறையில் மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கும், அரசு அறிவிக்கும் பணிகளை விரைவாக செய்து முடிக்க வேண்டும் என்று அதிகாரிகளை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தினார். ஆலோசனை கூட்டத்தில் அமைச்சர்கள் கீதா ஜீவன், அனிதா ராதாகிருஷ்ணன், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை செயலாளர் தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், பல்வேறு துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

முன்னதாக மகளிர் சுய உதவி குழுக்களின் கண்காட்சியை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டார். அதேபோல் 22 துறைகளின் சார்பில் 206 கோடியே 46 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 7 ஆயிரத்து 893 நபர்களுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இதன் அடையாளமாக 20 நபர்களுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

### 75 ஆண்டுகாலம் இயங்குகிற ஒரே இயக்கம் தி.மு.கழகம்தான்!

# தமிழ்நாட்டை அதிக முறை ஆண்டவர் முத்தமிழறிஞர் கலைஞர்தான்!

### திருவண்ணாமலையில் நடைபெற்ற பவளவிழாப் பொதுக்கூட்டத்தில் – அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

திருவண்ணாமலை, நவ. 16-

தமிழ்நாட்டில் 75 ஆண்டு காலமாக இயங்கி வருகிற ஒரே இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்தான். அதிக முறை ஆண்டவர் முத்தமிழறிஞர் கலைஞர்தான் என்று, திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில், கழக பவளவிழாவினை முன்னிட்டு, பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு, பொதுமக்களுக்கு நலஉதவிகள் வழங்கி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு உரையாற்றியபோது இவ்வாறு குறிப்பிட்டார்.

13.11.2024 புதன்கிழமை மாலை 6.00 மணிக்கு திருவண்ணாமலை, தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில், திருவண்ணாமலை நகரம், அம்பேத்கர் தெருவில், கழக பவள விழாவினை முன்னிட்டு பொதுமக்களுக்கு நலஉதவிகள் வழங்கும் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பொதுக்கூட்டத்திற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.என்.அண்ணாதுரை எம்.பி. தலைமை வகித்தார்.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எஸ்.கண்ணதாசன், கோ.ராஜசேகர், எம்.ரமேஷ், எஸ்.சதிஷ்குமார், டி.திலீப்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட துணை அமைப்பாளர் சு.ராஜாங்கம் அனைவரையும் வரவேற்று பேசினார்.

பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு, பொதுப் பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டகுழு உறுப்பினருமான எ.வ.வேலு அவர்கள் 1000க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு மூன்று சக்கர சைக்கிள், காதுகேட்கும் கருவி, வியாபாரத்திற்கான இட்லி பாத்திரங்கள் உள்ளிட்ட நலஉதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

அவர் ஆற்றிய உரையிலிருந்து...

தமிழ்நாட்டிலேயே 75 ஆண்டுகாலம் இயங்கிக் கொண்டிருக்கும் ஒரே இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம்தான். ஏன் இந்தியாவிலேயே கூட இப்படியொரு இயக்கம் இல்லை. அதேபோல தமிழகத்தை ஆறுமுறை ஆண்ட, ஆண்டு கொண்டிருக்கிற ஒரே இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம்தான். அதற்குகாரணம் நம் கழகத்திலே இருக்கிற கட்டுப்பாடுதான். அதனால்தான் இத்தனை ஆண்டுகாலம் இயங்க முடிகிறது. அதிலும் தமிழகத்தை 5முறை ஆண்டவர் நம் முத்தமிழறிஞர் கலைஞர்தான். ஏன் காமராஜரோ, எம்.ஜி.ஆரோ., ஜெயலலிதாவோ இத்தனை முறை ஆளவில்லை. இந்திய வரலாற்றில் ஒரு கட்சிக்குத் தலைவராக இருந்த ஒரே பெருமை தலைவர் கலைஞரை மட்டுமே சாரும். அடுத்த தேர்தலையல்ல, அடுத்த தலைமுறையை சிந்திக்கிற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். அதனால்தான் இத்தனை ஆண்டுகாலம் இந்த இயக்கம் தாக்குப்பிடிக்கிறது.

கழகத்தின் பவள விழாவினை ஆண்டு முழுவதும் கொண்டாடப்படவேண்டும் என்ற மாவட்டக் கழக தீர்மானத்தின்படி, இந்த



விழா இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கலைஞர் என்று உச்சரித்தாலே ஒரு கம்பீரம் கிடைக்கிறது. கலைஞர் என்று சொன்னால் நமக்கு நினைவிற்கு வருவது தமிழ், கலைஞர் என்று சொன்னால் நமக்கு நினைவிற்கு வருவது, இலக்கியம், தன்மானம், இனமானம், திராவிடம்.

எனவேதான் தமிழக முதலமைச்சர் இன்று திராவிட மாடல் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார். இன்னும் முழுமையாக சொல்லப்போனால், கலைஞர் என்று சொன்னால் அது நம் வாழ்க்கை. பெண்களுக்கு இன்றைக்கு சொத்தில் சம உரிமை கிடைப்பதற்கு காரணம் கலைஞர்தான்.

இந்த கூட்டத்தில் அருந்ததிய பெருமக்கள் அதிகளவில் திரண்டுள்ளீர், தமிழ்நாட்டில் உங்களுக்கான அமைப்புகள் 40 உள்ளது. அவர்களின் கோரிக்கை என்னவென்றால், இடஒதுக்கீடு அடிப்படையிலும் எங்களுக்கு சரியான கல்வி, வேலைவாய்ப்புகள் கிடைக்கவில்லை என்ற ஆதங்கம் இருந்து வந்தது. தருமபுரியில் தொடங்கி, ஒட்டன்சத்திரம் வரை 40க்கும் மேற்பட்ட தொகுதிகளில் அருந்ததியர் இன மக்கள் வசிக்கிறார்கள். உங்களின் நீண்டநாள் கோரிக்கையான உள்ஒதுக்கீட்டை ஒதுக்கித் தந்த பெருமை தலைவர் கலைஞரைத்தான் சாரும்.

3 விழுக்காடு உள்ஒதுக்கீடு தரக்கூடிய சட்டத்தினை, கலைஞர் மருத்துவமனையிலே சிகிச்சை எடுத்துக்கொண்டிருந்த காலக்கட்டத்தில், சட்டமன்றத்திலே பொறுப்பேற்று, அந்த சட்டத்தை நிறைவேற்றித்தந்தவர் இன்றைய முதலமைச்சர் அண்ணன் மு.க. ஸ்டாலின் தான். இதன் மூலம் அரசுப்பணி மற்றும் கல்வி நிலையங்களில் சிறப்பான வாய்ப்புகளைப் பெற்ற அருந்ததிய சமூகத்தினர் இதனை உணர்ந்து அனைவரும் தி.மு.க.விற்கு வாக்களிக்க தொடங்கியுள்ளனர்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு உரை நிகழ்த்தினார்.

பொதுக்கூட்டத்தில் சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி கழக மருத்துவர் அணிதுணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே. கம்பன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, கலசப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவணன், மாவட்டப் பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர் பிரியாவிஜயரங்கன், மாநில தொ.மு.ச.பேரவைச் செயலாளர் க.சௌந்தர ராசன், நகர செயலாளர் ப. கார்த்திவேல்மாறன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

நிறைவாக வட்ட செயலாளர் எஸ்.எழில்மாறன் நன்றி கூறுகிறார். முன்னதாக மாவட்ட தி.மு.க. இசைக்குழு அம்பேத்கர் வழங்கும் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.



நாகப்பட்டினம் மாவட்டம் நாகூர் தர்காவில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் ரூ.2 கோடி மதிப்பீட்டில் நடைபெறும் பழுது பார்த்தல் மற்றும் புனரமைப்புப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து நாகூர் வணிக சங்கக் கட்டிடத்தில் முஸ்லிம் மகளிர் உதவி சங்கங்கள் மூலம் 50 பயனாளிகளுக்கு தலா பத்தாயிரம் ரூபாய் விதம் 5 லட்சம் செலவில் தையல் இயந்திரம் மற்றும் இஸ்திரிப் பெட்டி வழங்கினார்கள். உடன் மாவட்டக் கழக செயலாளர் – தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத் தலைவர் என்.கௌதமன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆளூர் ஷாநவாஸ், நாகை மாலி, முதன்மை அறங்காவலர் கலிஃபா மஸ்தான் சாஹீத், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகத் தலைவர் உ.மதிவாணன், மாவட்ட ஆட்சியர் ஆகாஷ் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.